# தொடர்பு கொள்வோம்



நாம் எமது தேவைகளுக்காகத் தொடர்பு கொள்கின்றோம்.
யாருடன் தொடர்பு கொள்கின்றோம்?

தாய் தந்தையர்
சகோதரர்கள்
அயலவர்கள்
நண்பர்கள்
அதிகாரிகள்
அதிபர், ஆசிரியர்கள்
வெளிநாட்டவர் ஆகியோருடன் தொடர்பு கொள்கின்றோம்.

எப்படித் தொடர்பு கொள்கின்றோம்?

பேச்சு மூலம்
எழுத்து மூலம்

எப்படிப் பேசுகின்றோம்?

நேரடியாகப் பேசுகின்றோம்
தொலைபேசி மூலம் பேசுகின்றோம்

எழுத்து மூலமான தொடர்பாடல்கள் எவை?

கடிதம்
தந்தி
தொலைமடல்
மின் அஞ்சல்

இவற்றை விட வேறு நவீன சாதனங்களும் வந்துவிட்டன.

இன்ரநெற் - இது இணையம் என அழைக்கப் படுகின்றது.

செய்கோள் - இது செய்திகளைப் பெற்று எங்கும் பரிமாற உதவும்.



குறிப்பு : • இப்பாடத்தில பயன்படுத்தப்பட்ட அரும்பதங்களின் ஆங்கிலப பதங்களையும் அறிமுகப்படுத்துக.

| | | |
|---|---|---|
| தொலைபேசி | - | TELEPHONE |
| கடிதம் | - | LETTER |
| தந்தி | - | TELEGRAM |
| தொலைமடல் | - | FAX |
| மின்னஞ்சல் | - | ELECTRONIC MAIL |
| இணையம் | - | INTERNET |
| செய்கோள் | - | SATELITE |